DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC.No. 163/2023
Prosecution witness – PW.1

| | | |
|---|---|---|
| Name | : செல்வி. மணிமேகலை | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

( A1,A4 present. A2,3 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed)
03.01.2024 – 02.25 PM

சாட்சியை நிலைய W.Gr.I PC–171 அவர்கள் அடையாளம் காட்டினார்.

முதல் விசாரணை

1. நான் கிடாத்திருக்கை கிராமத்தில் எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும்.

2. கடந்த 12.10.2022 ம் தேதி நள்ளிரவு 01.00 மணியளவில் நான் எனது அம்மா, அம்மாச்சி ஆகியோருடன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தேன். இருட்டில் யாரோ சேலையை மூடிக் கொண்டு வீட்டிற்கு பின்புறமாக வந்தார்கள்.

3. நான் அந்த நபரை பார்த்து அந்த நபரின் கையை பிடித்தேன். எனது கையை அந்த நபர் தட்டிவிட்டு ஓடினார். நான் சத்தம் போடவும் எனது அப்பா எழுந்து வந்தார். எனது அப்பா வீட்டின் பின்புறம் தூங்கிக் கொண்டிருந்தார்.

4. அந்த நபரை துரத்தி ஓடினார். ஆனால் அவர் ஓடிவிட்டார். பிடிக்க முடியவில்லை. பின்னர் அன்று காலை 07.00 மணியளவில் நானும், எனது அப்பாவும் இரவு நடந்த சம்பவத்திற்காக காவல்நிலையத்தில் புகார் கொடுக்க கிளம்பினோம்.

5. காசிநாதன் என்பவர் இருசக்கர வாகனத்தில் வந்து எங்களை இடித்து, எங்களை அசிங்கமாக பேசினார். தேவிடியா மகளே என்று என்னை அசிங்கமாக பேசினார்.

6. எனது கழுத்தை பிடித்து கையால் என்னை அடித்தார். எனது அப்பாவை விலக்க வந்த போது தள்ளிவிட்டார். சம்பவத்தை பார்த்த எனது அம்மாச்சி, அம்மா, மாமா பொண்ணு தாரணிசெல்வி ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டார்கள்.

7. காசிநாதன் என்னைப் பார்த்து இரவு உன்னுடைய மொபைல் போனை திருடியது நான் தான் என்று சொன்னார். உன்னால் என்ன செய்ய முடியுமோ செய்து கொள் என்று மிரட்டி, என் குடும்பத்தின் மீது காவல்நிலையத்தில் புகார் அளித்தால் கொலை பண்ணிவிடுவேன் என்று மிரட்டினார்.

8. பின்னர் அவர் வந்த இருசக்கர வாகனத்தில் கிளம்பி சென்றுவிட்டார். அந்த இருசக்கர வாகனத்தின் எண். TN–65–AU–1177 என்ற புளூ கலர் இருசக்கர வாகனம் ஆகும்.

9. பின்னர் அரை மணி நேரம் கழித்து பேரையூர் காவல்நிலையம் சென்று காசிநாதன் மீதும், அவரை தூண்டிய நபர்களான நளமுருகன், அவரது பெற்றோர்களான முனியாண்டி, முனியம்மாள் ஆகியோர் மீது புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டது. அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். சம்பவம் போலீசார் என்னை குறித்து விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u> எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.